**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **C.C.No. 172/2012** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | Prosecution | : | **PW - 3** |
| | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | : | பிரேமாவதி |
| Father / Husband Name | : | பாலச்சந்தர் |
| Village | : | MIG 371. தமிழ் பல்கலை கழக குடியிருப்பு, வல்லம் ரோடு, |
| Taluk | : | தஞ்சாவூர் |
| Caste & Religion | : | இந்து |
| Calling | : | அரசு ஊழியர் |
| Age | : | 55/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.11.2022**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திரு எம். செழியன்,** தட்டச்சர்

**<u>C.C.No. 172/2012 10.11.2022</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.10**

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகின்றேன். அ.சா.1 சதீஷ் குமார் என்பவரை எனக்கு தெரியாது. நான் கடந்த 2003ம் ஆண்டு இளநிலை உதவியாளராக மேற்படி அலுவலகத்தில் பணியில் சேர்ந்தேன். 2006ம் ஆண்டு TN49 Q 9020 என்ற பதிவெண் கொண்ட டிராக்டருக்கு புதிய பதிவு எண் வழங்க மோட்டார் வாகன ஆய்வாளர் பதிவுறுத்தலை சரிபார்த்து வாகனத்தை ஆய்வு செய்து அலுவலகத்திற்கு சமர்ப்பித்த பிறகு புதிய பதிவு சான்று அலுவலகத்தில்

**C.C.No. 172/2012   10.11.2022**

வழங்கப்படும். ஆய்வு செய்யப்பட்ட பிறகு புதிய பதிவுச் சான்றில் இளநிலை உதவியாளர் நிலையில் எனது கையொப்பம் இடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் சான்றிட்ட நகல் கொண்ட டிராக்டரின் ஆர்.சி. யில் உள்ள சுருக்கொப்பம் என்னுடையது. **(அந்த டிராக்டரின் ஆர்.சி. யில் உள்ள சுருக்கொப்பம் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அந்த ஆர்.சியில் பாரத வங்கியின் பைனான்ஸ் இருந்தது. அந்த ஆர்.சியில் அலுவலக கிளார்க் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோர்கள் அதில் கையெழுத்து செய்வார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். எதற்காக விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை மாவட்ட குற்றப் பிரிவு காவல் நிலைய தலைமைக் காவலர் 1506 திருமதி சித்ரா அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :

நான் முதல் விசாரணையில் கூறிய டிராக்டரின் ஆர்.சி. ஆவணத்தில் அலுவலக உதவியாளர் என்ற பாலு என் பவரின் சுருக்கொப்பம் மற்றும் கண்காணிப்பாளர், கண்ணன் கையொப்பம் செய்து வாகனத்தின் Hypothecation யை ரத்து செய்ததாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றும், பின்னர் அதே டிராக்டருக்கு ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட் Hypothecation செய்து அதில் பாலு மற்றும் கண்ணன், சதிதேவி ஆகியோர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி பாரத வங்கியின் Hypothecation யை ரத்து செய்வதற்காக வங்கியில் இருந்து படிவம் 3 5 கொடுக்கவில்லை என்று பிரச்சனை வந்தது என்றும், அப்போது மேற்படி ரத்தான கோப்பை அலுவலகத்தில் தேடியபோது கிடைக்கவில்லை என்றும், இந்த விபரம் எனக்கு தெரியும் என்றும், மாவட்ட குற்றப் பிரிவு ஆய்வாளர் டிராக்டரின் ஆர்.சி. நகலை காட்டி என்னை விசாரித்தபோது 2003ம் ஆண்டில் இருந்த வேலை பார்த்ததால் இங்கு வேலை செய்த அலுவலர்களின் கையெழுத்துக்களும்,

**C.C.No. 172/2012 10.11.2022**

சுருக்கெழுத்துக்களும் எனக்கு நன்கு தெரியும் என்றும், அதை வைத்துதான் டிராக்டரின் ஆர்.சியில் Hypothecation பதிவு மற்றும் ரத்துக்கான பதிவுகளில் உள்ள சுருக்கொப்பம் மற்றும் கையெழுத்து செய்துள்ள அலுவலர்களின் பெயர்களை சொன்னேன் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகள் ஒரே அலுவலகத்தில் பணியாற்றி வருவதால் எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.